இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 278 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 05 – வெள்ளிக்கிழமை 19 மே 2023 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 278 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 05 - Friday 19 May 2023 - Madurai 8 Pages ₹ 5.00

## நெல்லையில் ரூ.33 கோடியில்

# பொருநை அருங்காட்சியக கட்டுமானப் பணி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, மே 19-

**உலக அருங்காட்சியக தினத்தையொட்டி திருநெல்வேலியில் உலகத் தரத்துடன் அமைக்கப்படவுள்ள 'பொருநை அருங்காட்சியகம்' கட்டுமானப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.5.2023) தலைமைச் செயலகத்தில், உலக அருங்காட்சியக தினத்தையொட்டி தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் திருநெல்வேலியில் 33 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளோடு அமைக்கப்படவுள்ள "பொருநை" அருங்காட்சியகத்திற்கான கட்டுமானப் பணிகளுக்கு காணொலி (Video Conferencing) வாயிலாக அடிக்கல் நாட்டினார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.5.2023) தலைமைச் செயலகத்தில், உலக அருங்காட்சியக தினத்தையொட்டி தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் திருநெல்வேலியில் 33 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளோடு அமைக்கப்படவுள்ள "பொருநை" அருங்காட்சியகத்திற்கான கட்டுமானப் பணிகளுக்கு காணொலி (Video Conferencing) வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி, மனிதவள மேலாண்மை மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், தொல்லியல் துறை இயக்குநர் சே.ரா.காந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருநெல்வேலியில் பொருநை அருங்காட்சியகம்!

தமிழ்நாட்டின் நாகரிகத் தொட்டிலாக கருதப்படும் ஆதிச்சநல்லூர், சங்க காலப் பாண்டியரின் துறைமுகமான கொற்கை, இரும்புக் காலத்தைச் சார்ந்த சிவகளை ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்களை ஒரே இடத்தில் 'பொருநை நாகரிகம்' என்ற கருப்பொருளின் அடிப்படையில் திருநெல்வேலியில் நவீன வசதிகளோடு பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 9.09.2021 அன்று சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.

அதன்படி, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர்புரம் கிராமம், மேலப்பாளையம் ரெட்டியார்பட்டி மலைப்பகுதியில் தேசிய நெடுஞ்சாலையையொட்டி அமைந்துள்ள 5.276 ஹெக்டேர் (13.02 ஏக்கர்) நிலப்பரப்பில் பொருநை அருங்காட்சியகம் அமைப்பதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதில், சுமார் 10 ஏக்கர் பரப்பளவு அருங்காட்சியக மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்படும். 55,500 சதுர அடி பரப்பளவில்,

33 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பொருநை அருங்காட்சியகத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் அடிக்கல் நாட்டினார்.

இந்த அருங்காட்சியக வளாகத்தில் கொற்கை, சிவகளை, ஆதிச்சநல்லூர் மற்றும் நிர்வாகக் கட்டடம் என 4 முதன்மைப் பிரிவுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன. முற்றங்கள், நெடுவரிசைகள், தாழ்வாரங்கள் போன்றவற்றுடன் இப்பகுதியின் வட்டார கட்டடக்கலைத் தன்மையை பிரதிபலிக்கும் கட்டமைப்புகள், முகப்புகளில் உள்ளூர் கலை மற்றும் கைவினைத் திறனின் கூறுகளைப் பயன்படுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### கொற்கை அகழாய்வு!

கொற்கையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்ணாடி மணிகள், கண்ணாடி வளையல்கள், சங்கு வளையல்கள், சுடுமண் மணிகள், அரிய கல் மணிகள், வட்டச்சில்லுகள், சுடுமண் உருவங்கள், இரும்புப் பொருட்கள், செம்புப் பொருட்கள், சுடுமண்ணால் செய்யப்பட்டு துளையிடப்பட்ட குழாய்கள், சங்க காலச் செப்புக்காசுகள், ரோம் நாட்டு அரிட்டன் வகை பானை ஓடுகள் மற்றும் சீன நாட்டு செலடன் வகை பானை ஓடுகள் ஆகிய தொல்பொருட்கள் மற்றும் செங்கல் கட்டுமானம் ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன. மொத்தம் 812 தொல்பொருட்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன .

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## இன்று 10ஆம் வகுப்பு மற்றும் பிளஸ் 1 தேர்வு முடிவுகள்!

சென்னை, மே 19-

தமிழகத்தில் 10ம் வகுப்பு பொதுத் தேர்வுகள், கடந்த ஏப்ரல் 6 முதல் ஏப்ரல் 20ஆம் தேதி வரை 3986 தேர்வு மையங்களில் நடத்தப்பட்டன. இந்த தேர்வினை சுமார் 9,96,089 மாணவ - மாணவிகள் எழுதினர்.

அதேபோல, 11ஆம் வகுப்பு தேர்வுகளும் இதே சமயத்தில் நடந்து முடிந்தன. இதனிடையே 10ம் வகுப்பு மற்றும் 11 ம் வகுப்புகளுக்கு எப்போது ரிசல்ட் வெளியிடப்படும் என கேள்வி எழுந்திருந்தது. முன்னதாக பிளஸ் 2 தேர்வு முடிவுகள் கடந்த 8ஆம் தேதி வெளியாகி இருந்தது.

இந்நிலையில் 10 வகுப்பு மற்றும் பிளஸ் 1 தேர்வு முடிவுகள் மே 19 ஆம் தேதி வெளியிடப்பட உள்ளதாக அரசு தேர்வுத்துறை இயக்ககம் அறிவித்துள்ளது. இதன்படி 2022-23ஆம் கல்வி ஆண்டுக்கான 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு முடிவுகள் இன்று (மே 19ஆம் தேதி ) காலை 10 மணிக்கு வெளியிடப்படும் என்றும் பிற்பகல் 2 மணிக்கு பிளஸ் 1 தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தேர்வு முடிவுகள் www.tnresults.nic.in மற்றும் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட உள்ளதாகவும், பள்ளி மாணவர்கள் சமர்ப்பித்த செல்போன் எண்ணிலும் குறுஞ்செய்தி மூலமாகவும் தேர்வு முடிவுகள் அனுப்பப்படும் என்றும் தேர்வுத்துறை தெரிவித்துள்ளது.

## தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும்!

# ஜல்லிக்கட்டுக்கு தடையில்லை!

## உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு பரபரப்பு தீர்ப்பு!

புதுடெல்லி, மே 19–

ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்த அனுமதி அளிக்கும் தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு தடையில்லை என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்த அரசு சிறப்பு சட்டம் இயற்றியது. இந்த சட்டத்திற்கு எதிராகவும், விலங்குகளை மையமாகக் கொண்ட விளையாட்டுகளுக்கு தடைவிதிக்க வேண்டும் எனவும் பீட்டா உள்ளிட்ட அமைப்புகள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தன. நீதிபதி கே.எம்.ஜோசப் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில் இந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டன. இறுதி விசாரணை கடந்த டிசம்பர் 8ஆம் தேதி முடிவடைந்த நிலையில் இன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு தடையில்லை என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்த அனுமதி அளிக்கும் தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும் என்றும், ஜல்லிக்கட்டு சட்டத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுவதாகவும் 5 நீதிபதிகளை கொண்ட அரசியல் சாசன அமர்வு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை வழங்கியது. ஜல்லிக்கட்டு தமிழ்நாடு கலாச்சாரத்தின் ஒரு பகுதி என்பதை ஏற்பதாகவும், ஜல்லிக்கட்டு சட்டத்துக்கு அரசியல் சாசன ஒப்புதல் அளித்தும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் ஜல்லிக்கட்டு போட்டிகள் குறித்து அரசு தாக்கல் செய்த ஆவணங்கள் திருப்தியாக உள்ளதாகவும்,



கலாச்சாரத்தின் அடையாளம் என்று அரசு சட்டம் இயற்றியுள்ள நிலையில் நீதித்துறை அதில் தலையிட முடியாது என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். ஜல்லிக்கட்டு வழக்கில் உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வின் 5 நீதிபதிகளும் ஒருமித்த தீர்ப்பை வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜல்லிக்கட்டுக்கு உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு அளித்துள்ள ஒப்புதல் என்பது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசின் சட்டப்போராட்டத்திற்கு கிடைத்து துள்ள வெற்றி என்று சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார். தீர்ப்பு வெளியானதும் டெல்லி உச்சநீதிமன்ற வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் ரகுபதி, தமிழ்நாடு அரசு சிறப்பான வழக்கறிஞர்களை அமர்த்தி வாதிட்டு தமிழ்நாட்டின் பாரம்பரியத்தை நிலைநாட்டி இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு தடையில்லை என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பை பட்டாசு வெடித்து தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் மற்றும் மாடுபிடி வீரர்கள் கொண்டாடினர்.

ஜல்லிக்கட்டுப் போட்டி நடத்த தடையில்லை என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதற்கு, தமிழ்நாடு அரசின் சட்டப்போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி என தி.மு.க. தொண்டர்கள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் தொண்டர்கள் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் உச்சநீதிமன்ற தீர்ப்பை வரவேற்றனர். அமைச்சர் பொன்முடி, தி.மு.க அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்டச் செயலாளர் சிற்றரசு மற்றும் தி.மு.க நிர்வாகிகள் பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

## மொரீசியஸ் ஜனாதிபதி குமரிக்கு வருகை!

கன்னியாகுமரி, மே 19-

மொரீசியஸ் நாட்டு ஜனாதிபதி பிருத்விராஜ் சிங் ரூபன், அவரது மனைவி சயுக்தா ரூபன் ஆகியோர் 2 நாள் பயணமாக நேற்று முன்தினம் கன்னியாகுமரிக்கு வந்தனர். அந்நாட்டு பிரதமர் பிரவிந்த் ஜகநாத்தின் தாயார் சரோஜினியும் வந்தார். குமரி மாவட்ட எஸ்.பி.ஹரி கிரஷ் பிரசாத் பூங்கொத்து வழங்கி வரவேற்றார். மாலை 6 மணியளவில் கார் மூலம் கோவனம் சூரிய அஸ்தமன பகுதிக்கு சென்றனர். அங்கு சூரிய அஸ்தமனத்தை கண்டு ரசித்தனர்.

நேற்று அதிகாலை முக்கடல் சங்கமம் பகுதிக்குச் சென்று சூரிய உதய காட்சியையும், பின்னர் படகு மூலம் விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் திருவள்ளுவர் சிலையையும் மொரீசியஸ் ஜனாதிபதி சுற்றி பார்த்தார்.

## டி.கே.சிவக்குமார் துணை முதல்வர்!

# கர்நாடக முதல்வராக சித்தராமையா தேர்வு!

## நாளை பதவியேற்பு! முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்பு!

புதுடெல்லி, மே 19-

கர்நாடக மாநிலத்தின் முதலமைச்சராக சித்தராமையாவும், துணை முதலமைச்சராக டி.கே.சிவக்குமாரும் நாளை பதவியேற்பார்கள் என காங்கிரஸ் கட்சி சார்பில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பதவியேற்பு விழாவில் காங்கிரஸ் அழைப்பை ஏற்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்கிறார்.

கர்நாடக சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் 135 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மை பெற்றது. அதன்பின்னர், கர்நாடக முதலமைச்சரை



தேர்வு செய்யும் பணிகள் தீவிரமாக நடைபெற்றது. அதன்பின்னர், கர்நாடக மாநில முதலமைச்சராக சித்தராமையா தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால், கர்நாடக மாநில பொறுப்பாளர் ரன்தீப் சிங் சுர்ஜேவாலா ஆகியோர் டெல்லி காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தனர். அப்போது பேசிய அவர்கள், கர்நாடகாவின் முதலமைச்சராக சித்தராமையாவும், துணை முதலமைச்சராக டி.கே.சிவக்குமாரும் நாளை (20ம் தேதி) 12.30 மணிக்கு பதவியேற்பார்கள் என்று தெரிவித்தனர். கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவராக டி.கே.சிவக்குமார் தொடர்வார் என்றும் அறிவித்தனர்.

இதனிடையே, பெங்களூருவில் நேற்று இரவு 7.30 மணிக்கு காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடைபெற்றது. அதன்பின்னர், ஆளுநரைச் சந்தித்து ஆட்சியமைக்க சித்தராமையா உரிமை கோர உள்ளார்.

## ஜல்லிக்கட்டுக்கு அனுமதி! உச்சநீதிமன்றத்தில்

# தமிழ்நாடு அரசு சிறப்புமிக்க தீர்ப்பைப் பெற்றுள்ளது!

## சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுடெல்லி, மே 19 -

ஜல்லிக்கட்டுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. தமிழ்நாடு அரசின் சட்டப்போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி என உச்ச நீதிமன்ற தீர்ப்பு குறித்து சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கருத்துத் தெரிவித்துள்ளார்.

உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி போட்டிகள் நடத்தப்படும் என்றும் அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.

அதன் விபரம் வருமாறு:-

ஜல்லிக்கட்டு சட்டத்தை இயற்றுவதற்கு தமிழ்நாடு அரசுக்கு உரிமை உள்ளது என உச்ச நீதிமன்றம் தெரிவித்தது. ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்த அனுமதிக்கும் தமிழ்நாடு அரசின் சட்டத்திற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது. அப்போது ஜல்லிக்கட்டுப் போட்டிகளை அனுமதிக்கும் தமிழ்நாடு அரசின் சட்டத்தை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.

ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த அனுமதிக்கும் சட்டத்தை இயற்றுவதற்கு தமிழ்நாடு அரசுக்கு உரிமை உள்ளது என உச்ச நீதிமன்றம் தெரிவித்தது. ஜல்லிக்கட்டு போட்டிகளை பண்பாட்டின் ஒரு பகுதியாக அறிவித்தபிறகு அதில் நீதிமன்றம் தலையிட முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்தது. அத்துடன் பீட்டா உள்ளிட்ட விலங்குகள் நல அமைப்புகள் தொடர்ந்த மனுக்களைத் தள்ளுபடி செய்தது.

கர்நாடகாவில் நடத்தப்படும் கம்பாலா, மகாராஷ்டிராவில் நடத்தப்படும் மாட்டு வண்டி பந்தயம் ஆகியவற்றுக்கு எதிரான மனுக்களையும் உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இந்த தீர்ப்பையடுத்து தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் ரகுபதி செய்தியாளர்களை சந்தித்து பேட்டியளித்தார்.

அப்போது, தமிழ்நாடு அரசு சிறந்த வழக்கறிஞர்களை வைத்து சிறப்புமிக்க தீர்ப்பை பெற்றுள்ளதாகவும், உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி ஜல்லிக்கட்டு போட்டிகள் நடத்தப்படும் என்றும் தெரிவித்தார். ஜல்லிக்கட்டுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. தமிழர்களின் பண்பாட்டில் இருந்து ஜல்லிக்கட்டை பிரிக்க முடியாது என்ற தமிழ்நாடு அரசின் வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் அமைச்சர் ரகுபதி கூறினார்.